# Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE,<br>KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 47 / 2019** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அசா. 13<br><br>Defense<br>Court |
| Name | பாலசுப்பிரமணியன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2025. | |

எதிரி - ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்பொழுது கீதாஞ்சலி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எங்களது மருத்துவமனையில் சிசிக்சை பெற்ற கோகுல் என்பவருக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்துள்ளது. மேற்படி மருத்துவர் கோகுல் எங்களது மருத்துவமனையை விட்டு சென்றுவிட்டபடியாலும், இவ்வழக்கில் காயம்பட்ட ராஜாமுகமது என்பவருக்கு நானும், சிகிச்சை அளித்தேன் என்பதால், அவருக்கு நான் ஆவணங்களை பரிசீலனை

செய்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 25.03.2017ம் தேதி ஒரு ராஜாமுகமது என்பவர் குளித்தலை அரச மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்காக எங்களது மருத்துவமனைக்கு வந்தார். அவருக்கு கடந்த 25.03.2017 முதல் 31.03.2017ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரை பரிசோதனை செய்ய அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன, காயம் எண்.1 6X4 X3 cm அளவில் இடது கையில் கிழிந்த காயம், காயம் எண். 2 - வலதுபக்க கையிலும், இடது பக்க தோள்பட்டை பகுதியிலும் கிழிந்த காயம், காயம் எண். 3 - முகத்தில்சில இடங்களில் சிதைந்த காயமும், இரண்டு கண்கள் வீங்கியும், காணப்பட்டது. மேற்படி அவருக்கு சி,டி ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே எடுத்து பாத்ததில் இடது பக்க மூக்கு எலும்பு, வலது பக்க கண்ணின் கீழ்பகுதியும், இரத்த கட்டும் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட 1,2 காயங்கள் சாதாரண காயங்களாகவும், மூன்றாவது காயம் கொடுங்காயம் என சான்று வழங்கப்பட்டது. அவருக்கு எங்களது மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.6. அவருக்கு வழங்கிய காய சான்றிதழ் அ.சா.ஆ.7, வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

காயம் பட்ட நபர் இரவு 10.55 மணிக்கு எங்களது மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார். அவரை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டோம். அவர் மூன்று தினங்கள் மேற்படி அவசர சிகிச்சை பிரிவில் இருந்தார். அவர் மருத்துவமனைக்கு வந்த சமயத்தில் பேச முடியாத நிலையில் இருந்தாரா என்றால் இல்லை. அவர் மருத்துவமனையில் இருந்த காலகட்டத்தில் அவரை மருத்துவர்கள் மற்றும் செவிலியரை தவிர வேறு யாரும் பார்க்கவில்லை. மேற்படி காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் இருசக்கர வாகனத்தில் சென்று விழுந்ததால் கூட ஏற்பட வாய்ப்பு உள்ளது.

மறுவிசாரணை இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- ( ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.